R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
August 2019



வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் 2019. தமிழகத்தில் 12 ஆண்டுகளில் பன்னிரெண்டு சபைகளை உருவாக்கியுள்ளனர் இவர்களை வாழ்த்துவோம்! இவர்களுக்காக ஜெபிப்போம்!

யார் இவர்கள்? கிறிஸ்துவின் ஆவிக்குரிய சந்ததி ... கலாத்தியர் 3:16; ரோமர் 16:16

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 19 ஆகஸ்டு 2019 கனி 9

August 15TH
INDEPENDENCE DAY

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P.












எமது ' தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ' வாசகர் மற்றும் கிறிஸ்துவின் ஊழியர்


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 228

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் எவனை ஜெயித்தார்கள்?
2. எவனோடு உடன்படிக்கை செய்த எல்லா மனுஷரும் அவனை எல்லை மட்டும் துரத்திவிட்டார்கள்?
3. என்னுடையதை என் இஷ்டப்படிசெய்ய எனக்கு அதிகாரமில்லையா என்றவர் யார்?
4. தேவன் எந்த நகரத்திற்கு தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்?
5. கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் எவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்?
6. தேவன் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் என்ன வையார்?
7. சீலோவாமிலே கோபுரம் விழுந்து எத்தனைபேரைக் கொன்றது?
8. நினிவேயின் ஸ்தானத்தை புரண்டுவருகிற வெள்ளத்தினால் என்னபண்ணுவார் என்று சொல்லப்பட்டிருந்தது?
9. இயேசுவின்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டவர்கள் யார்?
10. அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் எப்படிப்பட்டதல்ல?

## வேதாகம ஆய்வு... 13

அனனியா



Ananias

1. தேவ மேகம் என்று அர்த்தம்.
2. அனனியா சப்பீராளும் எருசலேமில் இருந்த முதற் சபையின் அங்கத்தினர்கள்.
3. காணிக்கை விஷயத்தில் வஞ்சகம் செய்து சாபத்திற்குள்ளானார்கள்.
4. முதலில் மரணம் அனனியாவுக்கு வந்தது – அப்.5:5
5. இந்த விஷயத்தில் ஒருமனப்பட்டபடியால் சப்பீராளும் மரித்தாள் – அப்.5:10

## சிறுவர் பகுதி

# தேவபக்தியின் வேஷம்

வேதபகுதி:2கொரிந்தியர்11:13-15



வேஷம் போடுகிறவர்களைப் பார்த்து இருப்பீர்கள். அவர்கள் நடிப்பிற்காகவும், வயிற்றுப் பிழைப்பிற்காகவும் வேஷம் போடுவார்கள். அதைப்போல வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள், ஏமாற்றுகிறவர்கள் சத்தியத்திற்கு விரோதமாக வேஷம் போடுவார்கள். அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏன் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றால் அப்படிப்பட்டவர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கவே! கோழி எப்படி தன் குஞ்சுகளைப் பருந்துவிடமிருந்து பாதுகாக்க; பருந்து வரும்போது கூவி அழைத்து குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் வைத்துக் கொள்ளுகிறதோ, அதைப்போல எதிராளிகளைக் குறித்து நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதலாவது நமக்கு எதிராளி யார் தெரியுமா? ஓ தெரியும் சார், என்று சொல்லுவீர்கள். யார் என்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கிற ஒருவனைக் கூறுவீர்கள். அவனல்ல. நான் சொல்ல வருவது சாத்தானை. அவன்தான் நமக்கு எதிராளி. ஏன் அவன் நமக்கு எதிராளி? அவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக செயல்படுகிறான். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்று வேதம் கூறுகிறது. அது ஆச்சரியமல்ல, சாத்தான் சாமர்த்தியசாலியாக இருக்கிறான். அதுமட்டுமல்ல அவனைச்சார்ந்த அவனுடைய ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்களும் நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்கள். எப்படியென்று கேட்கிறீர்களா? இன்று தேவனுடைய ஊழியன் என்று சொல்லிக்கொண்டு வலம் வருகிற அநேகர் கள்ளப்போதகர்கள். ஓநாய் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல, இவர்கள் தேவஊழியர்களைப்போல வேஷமிட்டு வருவார்கள். இவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட எபேசு சபையாரைப்போல அவர்களை சோதித்தறிந்து அந்தப் பொய்யரைக் கண்டறியலாம்.

இவர்களுடைய வேஷம் ஒருநாளில் வெளிக்குவரும் அது எந்த நாள் தெரியுமா? கர்த்தருடைய நாள். ஓ சரியாய் சொல்லிவிட்டாயே! ஆகையால் அன்பான தம்பி, தங்கைகளே இக்கடைசி நாட்களில் தேவபக்தியின் வேஷம்போட்டு வரும் இவர்களை அடையாளம் கண்டுகொண்டு எச்சரிப்பாக இருங்கள். அவர்களை விட்டு விலகுவது நல்லது. ஏனென்றால் அவர்கள் உங்களைப் பட்சித்துவிடுவார்கள்.

**மனப்பாட வசனம்:**

**“தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு” – 2தீமோத்தேயு3:5**

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 ஆகஸ்ட் -2019 கனி - 9

## ஆசிரியருரை

# பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

# Beware of Coveteousness



மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை இவைகள் எல்லா மனிதர்களுக்குள் இருக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் இவைகளை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்" (லூக்.12:15). பணம் இருந்தால் போதும் என்று வாழக்கூடிய கோடிக்கணக்கான ஜனங்களை இப்புவியில் காண்கிறோம். பணத்தினால் எதையும் வாங்கிவிடலாம் என்பார்கள். பணத்தினால் ஜீவனை வாங்கிவிட முடியுமா? அதை அவர்கள் சிந்திப்பதில்லை. அன்பானவர்களே, பொருள் வீட்டில் இருக்கலாம். அது நம்முடைய தேவைக்கு உதவுகிறதாயிருக்கிறது. அதின்மீது நம்முடைய ஆசை இருக்கக்கூடாது. பொருள் வீட்டில் இல்லையென்றால் அது வீடாக இருக்காது. வந்து பார்க்கிறவர்கள் இது என்ன வீடா என்று கேட்டுவிடுவார்கள். நீதிமொழிகளில் வாசிக்கிறோம்; "அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும்" (நீதி.24:4). பொருள்கள் அறைகளை அழகு படுத்தக்கூடியவைகள். அவைகள் அவசியம் அறைகளில் இருக்கவேண்டும். அதையே நாம் இச்சித்து அதன் மீது நம்முடைய முழுகவனத்தையும் செலுத்துவோமேயானால் அது தவறாயிருக்கும்.

ஒரு ஐசுவரியவானைப் பற்றி வேதத்தில் படிக்கிறோம்; அவன், "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:19,20). இவன் தனக்காகவே பொருள்களை சேகரித்து வைத்து தன் ஆத்துமாவோடே சொல்லிக்கொண்டான். இவனுடைய முழு நம்பிக்கை பொருள்களின் மீது இருந்தது. அதுவே தனக்கு ஜீவன் என்று எண்ணிக்கொண்டிருந்தான். அவனோ தான் ஒரு மதிகேடன் என்பதை அறியாதவனாயிருந்தபடியால் அவனுக்கு தேவன் அவனுடைய மதியீனத்தை உணர்த்தினார். இப்படி தங்களுடைய மதியீனத்தினால் கெட்டுப்போகிற

அநேகரை நாம் பார்க்கிறோம். அதைப்போலவே பொய் சொல்லி பொருள் சம்பாதிப்பதும் இருக்கிறது. "பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்" என சாலொமோன் தம்முடைய நீதி.21:6-ல் குறிப்பிட்டிருக்கிறார். எப்படியாவது சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்றுதான் அநேகர் நினைக்கிறார்கள். அதை உண்மையாக சம்பாதிக்கவேண்டும் என்று விரும்புகிறதில்லை. ஆகையால் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி சம்பாத்தியம் செய்கிறார்கள். அவர்களுடைய வருமானம் சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசத்தைப்போலவே இருக்கிறது. அவைகள் வந்தபடியே போய்விடுகிறது. அவர்களும் அந்தப்படியே போய்விடுகிறார்கள். நியாயமாய் சம்பாதிக்கிற வருமானமோ நிலைத்திருக்கும். ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? "நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" என்று எபி.13;5-ல் படிக்கிறோம். தேவன் யாவருக்கும் போதுமானவராயிருக்கிறார். அவரவருக்கு ஏற்ற படியை அவர் அனுதினமும் கொடுத்து போஷிக்கிறார். இயேசுவானவர் அப்போஸ்தலர்களோடிருக்கும்போது அவர்கள் எதைக்குறித்தும் கவலைப்பட்டார்களா? அவர்கள் ஒன்றைக்குறித்தும் கவலைப்படவில்லை. அவர்கள் அனுதினமும் போஷிக்கப்பட்டார்கள், அதுவும் அற்புதவிதமாக. அந்தப்படியாக கர்த்தர் நம்மோடிருக்கும்போது அவர் நம்மை போஷிக்க வல்லவராயிருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசித்தால் தேவன் உங்களை போஷிப்பதை அறிவீர்கள். இஸ்ரவேலரை நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் தேவதூதர்கள் சாப்பிடும் மன்னாவினாலே போஷித்தார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. இல்லாதவைகளிலிருந்து இருக்கிறவைகளை உண்டாக்குகிறவர் நம்முடைய தேவன்.

மேலும், நிலையான பொருளைக் கொடுக்கிறவர் கர்த்தர். வேதம் சொல்லுகிறது; "ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு" (நீதி.8:18). உலகத்தில் வீணானவைகளை நாடி அநேகர் வீணாய்போய்விடுகிறார்கள். கர்த்தர் தம்மை தேடுகிறவர்களுக்கும், தம்மைநோக்கி வருகிறவர்களுக்கும் நிலையான பொருளைக் கொடுக்கிறார். நாம் கண்களினால் பார்க்கிற எல்லாமே ஒரு நாளில் அழிந்துபோகும். ஆனால் கர்த்தர் கொடுக்கும் பொருள் அழியாதது. "பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது" என்கிறார் (நீதி.8:19). பொன்னையும் தங்கத்தையும் விரும்பாதவர்கள் யாரும் இருக்கமுடியாது அந்த அளவு அவைகளை நேசிக்கிறார்கள். ஆனால் அவைகளைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்கிறார். தேவனால் கிடைக்கக்கூடிய பலனைப் பெற்றுக்கொண்ட அநேக தேவ மக்களை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அவரால் கிடைத்த பலனாலே யாக்கோபின் மந்தையின் ஆடுகள் அதிகமான குட்டிகளைப்போட்டது. இதினால் லாபான்: கர்த்தர் யாக்கோபுடனே இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டான். அதைப்போல ஈசாக்கோடு தேவன் இருக்கிறார் என்பதை கேராரூர் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். "என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (நீதி.8:20,21). அந்தப்படியாக ஈசாக்கு கேராரூரில் விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான் என காண்கிறோம். கர்த்தரை நம்பி வேலை செய்யும்போது அவர்



## நீங்கள் இடுக்கமான வழியிலிருக்கும் எண்ணிக்கை குறைந்த சிறுபான்மை கூட்டத்தினரா? (மத்தேயு 7)

## Are you Part of the Tiny Minority on the Narrow Way?

**நீங்கள் முற்றிலும் தனிமையாக இருப்பதைப் போல உணர்வீர்களென்றால், தேவனுக்கென்று நிலை நிற்கிற நினைத்து மட்டும் பாருங்கள்...**




1. எட்டுப்பேர் மாத்திரம் பேழைக்குள் பிரவேசித்தார்கள்
2. நான்குபேர் மாத்திரம் சோதோம் கொமாரோவை விட்டு வெளியேறினார்கள்
3. தாவீது மட்டுமே கோலியாத்தை எதிர்த்து நின்றான்
4. எலியா மட்டுமே பாகால் தீர்க்கதரிசிகளுக்கு எதிராக நின்றான்
5. மூன்று எபிரெய வாலிபர்கள் மட்டுமே ராஜாவுடைய சிலையை வணங்க மறுத்தனர்
6. ஒரே ஒரு ஸ்திரீ மட்டுமே இயேசுவின் பாதத்தை பரிமளத் தைலத்தால் நனைத்தாள்
7. ஒரே ஒரு அப்போஸ்தலன் மட்டுமே கிறிஸ்துவின் சிலுவைக்கருகில் நின்றான்

**ஒரு உண்மைக் கிறிஸ்தவனாய் இருப்பதில் தனிமையை அநுபவிக்கலாம், ஆனால் பரலோகத்தில் பங்குகொள்ளும் சிறுபான்மையோர் முடிவிலே எல்லாவற்றையும் சுதந்தரிப்பார்**



Contact Us: 94435 58041

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**

விட்டுவிட்டார். ஆவியானவராலே ஏவப்பட்டு எழுதிய லூக்காவும் விட்டு விட்டார். இன்றுள்ள நவீனப் பிரசங்கியார்கள் சேர்ப்பதை பிலிப்பு விட்டு விட்டார், ஆனால் விட்டுவிடுவதை சேர்த்துவிட்டார். அவர் எப்படி இவ்வளவாக குழப்பப்பட்டிருக்கிறார்?

ஞானஸ்நானம் என்ற வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து நேரடியாக மொழிமாற்றம் செய்யப்பட்டது. அதனுடைய நேரடியான அர்த்தம் மூழ்குதல் மட்டுமே என்ற சொல்லுக்குப் பொருந்தும்.

2. மூழ்குதல் மட்டுமே பல நூற்றாண்டுகளாக கடைபிடிக்கப்பட்டு வந்தது.

அந்த அண்ணகன் தன் வழியே சந்தோஷத்தோடே சென்றான்.

1. வானம் நீல நிறமாய்க் காட்சியளித்தது பகல் பிரகாசித்து அவனுடைய இருதயத்திலே மகிழ்ச்சியிருந்தது.

2. அவன் தன்னுடைய கடந்த காலப் பாவங்களிலிருந்து மீட்கப்பட்டான்.

3. அவன் நித்திய இராஜ்யத்தின் ஒரு குடிமகன் இனி ஒருபோதும் இரண்டாந்தரக் குடிமகன் அல்ல.

**நிறைவாக:**

1. நீங்கள் சுவிசேஷத்தினுடைய போதனைக்கு செவி சாய்ந்திராவிட்டால், இன்று அதைச் செய்யுங்கள் என்று வேண்டுகிறேன்.

2. நமக்கு இரண்டு வகையான மாதிரிகள் உண்டு. ஒன்று வேதவாக்கியங்கள் இரண்டாவது மனிதர்கள். மனிதர்களைக் நோக்குவதன் மூலம் நாம் விரும்புகிற எந்த வழியிலும் இரட்சிக்கப்படலாம் அல்லது நாம் அந்த அண்ணகனின் மாதிரியைப் பின்பற்றுவோம்.

3. உங்களுடைய மனமாற்றத்தை அந்தப் பொக்கிஷதாரியின் மனமாற்றத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஞானஸ்நானம் பெற்றபோது நான் உறுதியான ஒரு நிலையை எடுப்பதற்கு எனக்கு போதுமான வயதிருந்ததா?

நான் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்தேனா அல்லது வேறு எதையாவதையா?

நான் மூழ்கப்பட்டேனா? அல்லது தெளிக்கப்பட்டேனா?

நான் நோக்கத்தை (ஞானஸ்நானத்தின்) அறிந்து செயல்பட்டேனா? அல்லது இன்னொரு மதச் சடங்கை நிறைவேற்றினேனா? உன் முழு இருதயத்தோடும் இயேசுவில் அன்பு கூறுகிறாயா?

4. உன்னுடைய மனமாற்றம் அந்த அண்ணகனுடையதைப் போல் இல்லாவிட்டால் அதை சரிசெய்ய ஒன்றும் காலம் கடந்து விடவில்லை. உன் ஆத்துமாவோடு சூதாடாதே!

ஜெபியுங்கள்



- நமது மாத இதழின் புதிய வாசகர்களுக்காக...
- அடுத்த மாதம் நடைபெறவுள்ள கூட்டங்களுக்காக...
- சுவிசேஷ தடைகள் நீங்க...
- அனைத்து விதமான நேயாளிகளுக்காக...
- கிராமத்திற்கு ஒரு சபை எழும்ப...
- தேவனுடைய பிள்ளைகள் விசேஷித்த ஞானத்தைப் பெற...
- புதிய கண்டுபிடிப்புகளுக்காக தேவனை துதியுங்கள்...



நியாயப்பாதைகளுக்குள் நம்மை வழிநடத்தி பரிபூரணமான ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். அன்பானவர்களே, கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு நிலையான பொருளைக்கொடுக்க வல்லவராயிருக்கிறார்.

பிறனுடைய பொருளை இச்சியாதே: நிலையான பொருளை கர்த்தர் கொடுக்கும்போது நாம் ஏன் பிறனுடைய பொருளை இச்சிக்கவேண்டும். கர்த்தர் தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு இதைக் கட்டளையாக கொடுத்திருந்தார். முற்பிதாக்களின் காலத்தில் இஸ்ரவேலருக்கு பத்து கட்டளை கொடுக்கும்போது அதில் ஒரு கட்டளையாக இதைக் கொடுத்தார். "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும் அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்" (யாத்.20:17). இக்கட்டளையை கைக்கொள்ளாமல் இச்சித்தவர்கள் நாளடைவில் அழிக்கப்பட்டார்கள். இச்சை பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும்போது மரணத்தை பிறப்பிக்கும் என்ற வசனத்தின்படி நடந்தது. நமக்கு வேண்டியவற்றை தேவன் நமக்கு கொடுத்திருக்கும்போது நாம் ஏன் பிறனுக்குள்ள ஒன்றை இச்சிக்கவேண்டும். இதை ஒருவர் சிந்திப்பாரேயென்றால் அவர்கள் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்கமாட்டார்கள். பிறனுக்குள்ள ஒன்றை நாம் இச்சித்து எடுத்துக்கொள்ளும்போது அதை இழந்தவன் பாதிக்கப்படுகிறான். ஒன்று அதை அவன் நம்பியிருப்பான் அல்லது அது அவனைவிட்டு பறிபோகும்போது அவனுடைய மனநிலை பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகிறது. அப்படி பாதிக்கப்படும்போது அவனுடைய ஆத்துமா கர்த்தரை நோக்கி முறையிடும். அப்பொழுது கர்த்தர் அதற்கு நியாயம் செய்யாமலிருப்பாரா? என்பதை சற்றே நிதானித்துப்பாருங்கள்.

ஆபிரகாம் என்ற தேவ மனிதன் இருந்தார்; அவரோ பிறனுக்குள்ள ஒன்றையும் இச்சிக்கவில்லை என வேதம் அவரைக்குறித்து சாட்சிகொடுக்கிறது. "ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" என்றார் (ஆதி.14:22,23). இந்த ஆபிரகாமைப் பற்றி வேதாகமத்தில் துவக்க புத்தகத்தில் படிக்கிறோம். அக்காலத்திலே அவர் பிறனுடைய பொருளை இச்சிக்காதவராயிருந்திருக்கிறார். அப்பொழுது பத்துகட்டளைகள் கொடுக்கப்படவில்லை. கட்டளைகள் இல்லாத காலத்திலே தேவனை நோக்கி அவரிடம் தன்னுடைய தேவைகளை கேட்டு பெற்றுக்கொண்டவராயிருந்திருக்கிறார். அவர் காலத்திலும் சரி, இன்றும் சரி, தேவனை நோக்கி கேட்கிறவர்களுக்கு அவர் கொடுக்கிறவராயிருக்கிறார். பிறனுடையதை எடுத்து அல்ல. அவன் ஜீவியகாலமெல்லாம் அநுபவிக்கக்கூடிய பொருளை அவனுக்கு தனிப்பட்ட விதத்தில் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் அன்பானவர்களே, பிறனுடைய பொருளைக்குறித்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். அது பொருளாயிருந்தாலும், வேலைக்காரர்களாயிருந்தாலும் மற்றொன்றாக இருந்தாலும் அது பிறனுடையது அவனுக்கே அது சொந்தம் என்பதை மறவாதிருங்கள்.

இஸ்ரவேலர் தோற்றுப்போவதற்கு ஆகானின் பாவம் ஒரு காரணமாயிருந்தது. இஸ்ரவேலருக்குள்ளே இவ்விதமான மனிதர் இருக்கக்கூடாது. ஆனாலும் ஒருவன் இருந்தான் அதனால் இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தில் தோற்றுப்போனார்கள். தோற்றுப்போன காரணத்தை அறியும்படி சீட்டுப்போட்டார்கள், ஆகானின் பெயர் வந்தது.

அப்பொழுது "ஆகான் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக; மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன்" என்றான் (யோசு.7:20). இவனுடைய இச்சை முழு பாளையத்தையும் பாதித்தது. சபையில் ஒருவர் தவறு செய்வாரேயென்றால் அந்த முழு சபைக்கும் கெட்டபெயரை உண்டாக்குகிறது. இச்சிக்கும் நபர் அதாவது தவறு செய்யும் நபர் இதை புரிந்துகொள்ளவேண்டும். ஆகையால் தனக்கானவைகளையல்ல பிறனுக்கானவைகளை நாடுவானாக என்ற வசனத்தின்படி பிறனுடைய நன்மைகளை நாடவேண்டும். யார் எப்படி போனால் என்ன என் தேவைகள் சந்திக்கப்படவேண்டும் என்று நினைப்பவர்கள் இறுதியில் கர்த்தரால் தண்டிக்கப்படுவார்கள். தேவன் பாவம் செய்தவர்களை தண்டியாமல் விடார் என காண்கிறோம். அன்பு நண்பரே, நீ பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிரு. தேவன் ஒவ்வொருவருக்கும் தேவையானதற்கு தக்கதாக கொடுத்திருக்கிறார். இவ்வளவு பெரிய பூமியில் ஒரு சிறுஇடத்தில் குடியிருந்து கொண்டு வருகிறோம் என்பதை அறிந்துகொள். இதில் மனிதன் நடக்கவேண்டிய வழியை வேதாகமம் நமக்கு போதிக்கிறது. உலகத்திலுள்ளதெல்லாம் எனக்குத்தான் என்று எண்ணாதே, உனக்குள்ளதை பற்றிக்கொள். பிறனுடையதை இச்சியாதே. உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். அப்பொழுது நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லிய கர்த்தர் உம்மோடிருந்து உன்னை வழிநடத்துவார்.

**இல்லாமற்போகும் பொருள் மீது நமது கவனத்தை செலுத்தும்போது அதனுடைய முடிவு என்ன?**

அநேகர் இன்று இருந்து நாளைக்கு இல்லாமற்போகும் பொருள் மீது தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி ஏமாற்றப்படுகிறார்கள். வேதம் இப்படியாக சொல்லுகிறது; "இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போலச் சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக் கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோகும்" என்கிறது (நீதி.23:5).பிரசங்கி மாயை மாயை எல்லாம் மாயை என்கிறான். நம்முடைய ஆண்டவர் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? என்கிறார் இப்படி ஒரு காட்டுப்புல்லுக்கு விதவிதமான வகையில் உடுத்துவிக்கும்போது தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நமக்கு தேவன் செய்யாமலிருப்பாரா? அதிகமான நன்மைகளை செய்வார் அல்லவா! அப்படியிருக்கும்போது நாம் ஏன் இல்லாமற்போகும் நிலையில்லாத பொருள்களின் மீது நம்முடைய கவனத்தை செலுத்தி ஏமாற்றமடையவேண்டும். தேவன் நம்முடைய தேவைகளை அறிகிறார். தாய் தன் பிள்ளைக்கு இறங்காமல் இருப்பாளோ, நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்குவேண்டியவற்றை கொடுத்திருக்கிறார். அவைகளை அநுபவித்து, பிறனுடைய பொருளைப்பற்றிய விஷயத்தில் கவனமாயிருங்கள்.


**நடப்புச்செய்திகள்**

❒ 2027ம் ஆண்டில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா மிஞ்சும் என ஐ.நா. அறிக்கையில் தெரியவந்துள்ளது.

❒ மாணவர்களின் உடல் திறனை பாதிக்கும் வகையில், புத்தகப் பையின் எடையை அதிகரிக்கக் கூடாது என அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு சி.பி.எஸ்.இ., பள்ளிகளுக்கும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.



## எத்தியோப்பிய அண்ணகனின் மாற்றம்
## Conversion of Ethiopian Eunuch
(அப்போஸ்தலர் 8:26-40) பாடம் - 32 -Jerry




-சென்ற மாத இதழின் தொடர்ச்சி

அவர் வாலிப வயதில் கொடூரமாக மரித்தார்.

4. அவருடைய மரணம் மற்றும் அடக்கத்தைப் பற்றி மற்ற வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. பிலிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக ஏன் மேசியா மரிக்க வேண்டுமென்று பிரசங்கித்திருக்க வேண்டும். ஏசாயா 53 அதன் தொடக்கமே.

6. அவர் அப்போதுதான் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தபடியால் அந்த அண்ணகனுக்கு கொஞ்சமாவது இயேசுவைப் பற்றியும் அவருடைய சபை வேகமாக வளர்வது பற்றியும் தெரிந்திருக்கவேண்டும்.

பதில்: ஒரு மாதிரி உடனடியாகக் கீழ்ப்படிதல் (அப்.8:36-39).

பிலிப்பு இயேசுவைப் பற்றி மட்டுமே பிரசங்கிக்க வில்லை. ஆனால் அந்த இயேசு செய்தவற்றிலிருந்து இந்த அண்ணகன் என்ன நன்மையைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் பிரசங்கித்தான் (அப்.8:36). அவனுடைய சத்தத்தில் ஒரு பரவசத்தை நாம் கேட்க முடியும்.

இயேசுவானவர் மாற்கு 16:16 வசனத்தை வலியுறுத்திச் சொன்னார். விசுவாசம் எப்போதுமே ஞானஸ்நானத்துக்கு முன்னதாக வரவேண்டும்.

விசுவாசமில்லாமல் ஒரு மனிதன் ஞானஸ்நானம் பண்ணப்படுவது கூடாத காரியம். ஏதோ அவனால் முடியாது என்பதல்ல. வேண்டுமானால் அவன் தண்ணீரில் மூழ்கலாமேயொழிய ஞானஸ்நானம் பண்ணப்பட முடியாது.

**அறிக்கையிடுதல்:** ரோம.10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை செய்யப்படும்.

1. விசுவாசம் அறிக்கையிடுதல் ஆகிய இரண்டும் இங்கே இணைக்கப்பட்டிருக்கிறது. இவை இரண்டுமே இரட்சிப்புக்கு முக்கியமானவைகள் மற்றும் இரட்சிப்புக்கு முந்தினவைகள்.

2. இது ஏதோ ஒரு உண்மையின் அறிக்கையல்ல. இது ஒரு ஒப்புக்கொள்ளுதல்.

3. அவன் அவனுடைய கடந்த கால வாழ்க்கையைப் பற்றியோ அல்லது வேதத்தின் பெரிய உபதேசங்களைப் பற்றியோ கேள்வி கேட்கவில்லை என்பதைக் கவனிக்கவும்.

**ஞானஸ்நானம் பண்ணப்படுதல்:**

1. ஞானஸ்நானம் எடுக்க தன்னை ஒப்புக்கொடுத்தான். சிலர் ஞானஸ்நானத்தை விட்டு வெளியேற வழி பார்க்கிறார்கள். ஆனால் அந்த அண்ணகன் ஞானஸ்நானம் எடுக்க தடை என்ன என்ற கேள்வியை கேட்டான்.

2. ஞாயிறு காலை வரை காத்திரு என்று பிலிப்பு சொல்லவில்லை.

3. சபை உனக்கு ஆதரவாக வாக்களிக்கும்வரை காத்திரு என்று சொல்வில்லை

4. நீ காத்திருந்து உன் ஊரிலுள்ள ஒரு நல்ல சபையில் சேரும்வரைக் காத்திரு என்றும் சொல்லவில்லை.

5. ஜெபம் பண்ணும்படி ஏதுவுமே சொல்லவில்லை. இன்றைய நவீன பிரசங்கியார்களின் கருத்துப்படி மிக முக்கியப் பகுதியாகிய பாவியின் ஜெபத்தை

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 11**

**11. கடைசி காலம் எப்படியிருக்கும்?**

1. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் ☐ வசன ஆதாரம் -----------------

2. எப்பேர்ப்பட்ட பாவியையும் கடைசியில் மன்னிப்பார் ☐ வசன ஆதாரம்- ------------------------------------------------------------

3. அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? என்பார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் அறிவிக்கப்படும் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

5. நோவா காலத்தில் நடந்தபடியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் ☐ வசன ஆதாரம்------------------------------------------

6. கடைசி காலம் உபத்திரவம் இல்லாத காலம் ☐ வசன ஆதாரம்---------- ------------------------------------------------------------

7. அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள் அதினாலே இது கடைசிகாலமென்று அறிகிறோம் ☐ வசன ஆதாரம்-------------------

8. பிதாவையும் குமாரனையும் ஏற்றுக்கொள்கிறவனே அந்திக்கிறிஸ்து ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

9. கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் ☐ வசன ஆதாரம்-------------------

10. மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பார் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை நகலெடுப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**





## பழைய பாவமனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

### திருடுதல் - Stealing

*-J.C.Choate*

**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

ஒருவன் இன்னொருவனிடமிருந்து திருடுகிறவன் அல்லது ஒரு திருடனாயிருப்பவன், அவன் தனக்குரியதல்லாத ஒன்றை எடுத்துக்கொள்ளுகிறவனாயிருக்கிறான். அவன் ஒரு சோம்பேறி, தன்னுடைய வாழ்வுக்கென்று வேலை செய்ய விரும்பாதவனும் அல்லது தான் வைத்துக்கொள்ள விரும்பும் பொருட்களை வாங்குவதற்கென்று சம்பாதிக்க விரும்பாதவனுமாயிருக்கிறான். "உன்னுடையதை நான் எடுத்துக்கொள்ள முடியுமானால் உன்னுடையது எதுவோ அது என்னுடையது" என்பதே அவனுடைய தத்துவமாகும். மற்றவர்களை விட மோசமாக இது தங்களுக்குத் தேவையான அல்லது பணக்காரர்களிடம் எதை எடுத்துக் கொண்டால் அது அவர்களுக்கு வேதனையளிக்குமோ அதையும் செய்ய பல காரணங்களை சொல்லுவார்கள். ஆனால் குறிப்பு என்னவென்றால், இது திருடனுக்குரியதல்ல ஆனபடியினால் இது மோசமான காரியம் அல்லது தவறானது. மேலும் நாட்டின் சட்டத்திற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக அவன் பின்பற்றக்கூடிய தேவனுடைய சட்டத்திற்கும் விரோதமானது. திருடுதல் என்பது இன்று மிக மோசமானது. எல்லாவித களவுகளும் காணப்படுகின்றன. இப்படிப்பட்டவைகள் தினமும் செய்திகளில் வெளிவருகிறது. மற்றவர்களை அடித்து அவர்களிடமிருப்பதை எடுத்துக்கொள்ள எல்லாவிதமான சதிகளும் செய்யப்படுகிறது. மேலும் இது களவு செய்தல் மற்றும் திருடுதல் போன்றவற்றைக் காட்டிலும் குறைவானதல்ல. அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதில் ஏமாற்றுகிறவனையும் தங்களுடைய வேலைக்காரர்களுக்கு நேர்மையான ஒரு நாளின் வேலைக்குரிய ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறவனையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

ஆனபடியால், திருடுதல் என்பது தவறானது மேலும் இவ்வாறு செய்வதில் ஒத்துப்போக ஒரு வழியைப் பின்பற்றுவதும் தவறானது. எனவே இந்த பாவத்தினிமித்தம் மனந்திரும்புவதற்கு குற்ற உணர்வு தேவையாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் "திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" எபே.4:28 என்று சொல்லுகிறார். இதுதான் இதற்கு விடை. திருடுதலை விட்டு விட்டு வேலைக்குச் செல்லுங்கள். மேலும் மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு பதிலாக, உங்களுடைய சொந்த தேவைக்கென்று போதுமான சம்பளத்தைச் சம்பாதிக்கும்படிக்கு கவனமாயிருங்கள். அதன்பின் தேவையிலிருக்கும் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கத்தக்க தேவையான பணத்தைப் பெற்றிருப்பீர்கள். இதுதான் உண்மையான மனந்திரும்புதல்.

ஆனால் இது எதுவாக இந்தபோதிலும் களவு செய்தல் அல்லது திருடுதல் போன்றவைகளை வகைப்படுத்த முடியாதபடி பல காரியங்கள் செய்யப்பட்டாயிற்று. நீங்கள் இப்பேர்பட்ட சிலகாரியங்களை

செய்துகொண்டிருப்பீர்களென்றால் பின்பு நிச்சயமாக நீங்கள் இதைப்பற்றி அறிந்து கொள்வீர்கள். ஆனால் நீங்கள் களவு செய்கிறவர் என்றோ அல்லது திருடன் என்றோ அழைக்கப்பட விரும்பமாட்டீர்கள் தானே? இவைகளைச் செய்கின்றவர்களை அரசு சிறையில் போட்டு விடுகிறது இல்லையா? ஆனால் ஒரு நிமிடம் பொறுத்திருங்கள்! நீங்கள் பிடிபட்டிருக்கவில்லை, ஏனென்றால் இதன் பொருள் நீங்கள் திருடன் அல்ல என்பதல்ல. மேலும் நீங்கள் ஒருபோதும் பிடிபடாமல் போனாலும், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களென்று தேவன் அறிகிறார். மேலும் ஒரு திருடன் இவ்வுலகிலும் வரப்போகிற உலகிலும் கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. நான் உங்களை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன், ஆனபடியினால் இயற்கையாகவே கேள்விக்கு விடையளிக்கக் கூடியபடி ஏதாவது செய்து கொண்டிருப்பீர்களென்றால், அதற்காக மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.

பிறகு சபையிலும் கூட ஒவ்வொரு ஞாயிறும் தங்களுடைய கைகளின் பிரயாசத்தைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறபடி கொடுக்காமலிருப்பது அல்லது நேரத்தைக் கொடுக்காமல் இருப்பது கர்த்தருடைய வேலைக்கென்று உதவும்படி தாலந்துகளை கொடுக்காமல் இருப்பது போன்றவைகளைச் செய்யும்போது தேவனைக் கொள்ளையடிக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற நீங்களும் கூட மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாவது அவசியம்.

நீங்கள் கிறிஸ்தவர்களாயில்லாமலிருந்தால், தயவுசெய்து ஒரு கிறிஸ்தவனாக மாறுங்கள். கர்த்தருக்கு நீங்களும் தேவை. அவரில் விசுவாசம் கொண்டு, மனந்திரும்பி அல்லது உங்கள் பாவங்களிலிருந்து விலகி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இதை நீங்கள் செய்யும்போது கிறிஸ்து உங்களை இரட்சித்து, உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ளுவார். ஆனால் விசுவாசியாதவனையல்ல (மாற்.16;16; அப்.2:47).

நாம் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள நாம் சேர்ந்துகொண்டது பற்றி சந்தோஷப்படுகிறேன்,

### பொது அறிவுச் சோதனை


1. சிவப்பு கோள் என்பது எது?
   அ)செவ்வாய் ஆ)வியாழன் இ)நெப்டியூன்
2. இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை நீக்குவது எது?
   அ)இதயம் ஆ)சிறுநீரகம் இ)கல்லீரல்
3. கடல் நீரின் இறக்கம் ஏற்றம் ஒரு நாளுக்கு இருமுறை ஏற்படக் காரணம் என்ன?
   அ)பூமி சூரியனை சுற்றுவதால் ஆ)நட்சத்திரங்கள் தன்னைத்தானே சுற்றுவதால் இ)பூமி தன்னைத்தானே சுற்றுவதால்
4. இந்திய இலக்கியத்திற்கு வழங்கப்படும் உயர்ந்த விருது?
   அ)ஞானபீட விருது ஆ)அர்ச்சுனா விருது இ)பாரத ரத்னா விருது
5. கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது? அ)வ.உ.சிதம்பரனார் ஆ)இந்திராகாந்தி இ)எம்.ஜி.ஆர்

**விடைகள்:1.செவ்வாய் 2.சிறுநீரகம் 3.பூமி தன்னைத்தானே சுற்றுவதால் 4.ஞானபீட விருது 5.இந்திராகாந்தி**



*உன்னுடைய நினைவுகளைக் காத்துக்கொள்;*
*அவைகள் வார்த்தைகளாக மாறுகிறது*
*உன்னுடைய வார்த்தைகளைக் காத்துக்கொள்:*
*அவைகள் செய்ல்களாக மாறுகிறது*
*உன்னுடைய செயல்களைக் காத்துக்கொள்;*
*அவைகள் பழக்கவழக்கங்களாக மாறுகிறது.*
*உன்னுடைய பழக்கவழக்கங்களைக் காத்துக்கொள்;*
*அவைகள் குணமாக மாறுகிறது.*
*உன்னுடைய குணத்தைக் காத்துக்கொள்;*
*அவைகள் உன்னுடைய வழியாக மாறுகிறது.*

***-TVOTI***



### ஒரு கோதுமை விதை
A Grain of Wheat



ஒரு கோதுமை விதை சாகாவிட்டால்,
அது ஒரு தனி விதையாக,
தனிமையில் நிலைத்திருக்கும்,
நாம் நமது சுயத்தை
சாகடிக்காவிட்டால்,
நாம் நமது கர்த்தருடைய
அறுவடை விதையாக
இருக்கமுடியாது.

அவர் ஜீவித்தார், அவர் நேசித்தார்,
நமக்காக எல்லாவற்றையும்
கொடுத்தார்
ஆகவே அவர் தம்மையே
“தானியத்தின் விதையாக”
விதைத்தார்,
அவருக்காக, நமக்கு அறுவடை
வருகிறது,
மரணம் மரிப்பதற்காகவும்
ஜீவன் ஜெநிப்பதற்காகவும்.

*இயேசு தம்மைப் பின்பற்ற துரிதப்படுத்துகிறார்,*
*நிலைத்திருந்து, அதிக கனிகளைக் கொடுக்க,*
*நாம் கல்வாரியை அனுபவிக்கத் தேவையில்லை*
*நாம் விதை விதைக்க வேண்டியதே அவசியம்.*

*- Calton Elkins **(TVOTI)***

"--நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22). சிலர் வசனம் இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்று கிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கணவனோடு சேர்ந்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உன்னுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (2கொரி.9:6).

**மற்றவர்களை வஞ்சித்தல்:** கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம் முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான். நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!

அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends -TVOTI



**சபையோடு இணையச்செய்தல்**
**உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது**
Getting Involved with the Church Helps Your Friends **பாடம் -9**

**சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

சபையானது கிறிஸ்துவின் சரீரம். எபேசியர்5:21-23ல், பவுல் கிறிஸ்துவையும் சபையையும் புருஷனாகவும் சபை மனைவியாகவும் இருக்கின்றனர் என்கிறார். அவர் சபையை ஒரு ஆலயத்திற்கு ஒப்பிட்டார் (எபே.2:20-22) உண்மையில் சபை என்பது என்ன? "சபை" என்பது ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவைப் பின்பற்றும்படிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஜனக்கூட்டமாகவும் வாரத்தின் முதல் நாள் தோறும் அவர் கட்டளையிட்டிருக்கிறபடி கூடி தேவனை ஆராதிக்கும் ஜனக்கூட்டமாகவும் இருக்கிறது (அப்.2:42; 20:7; 1கொரி.16:1,2).

சபையில் ஒவ்வொரு நபரும் ஒப்பற்றவர்களும் விசேஷித்தவர்களுமாயிருக்கிறார்கள். நம்முடைய வாழ்வில் நாம் அனைவரும் தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றும்படி வெவ்வேறு தாலந்துகளையும் திறமைகளையும் கொண்டிருக்கிறோம். பவுல் சபையின் அடையாளமாக கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது என 1கொரி.12:12-31 மற்றும் ரோமர் 12:3-8 போன்ற இரு புத்தகங்களிலும் இருக்கிறதென்று விவரித்துள்ளார். மேலும் அவர் சரீரத்தின் அவயவங்கள் வேறுபட்ட பணிகளைச் செய்கிறது என்கிறார். சிலர் கைகள் செய்யும் வேலையையும், சிலர் காதுகள், சிலர் கண்கள் செய்யும் வேலைகளையும் வெளிப்படையான மாம்ச சரீரத்தின் அவயவங்கள் ஒத்துழைப்புக்கென்று இசைவாக இணைந்து செயல்படுவது போல வேலை செய்கிறது, அதைப்போல ஆவிக்குரிய சரீரமும் ஒற்றுமைக்கென்று இசைவாக இணைந்து பணியாற்றுகிறது. ஆவிக்குரிய சரீரத்திலுள்ள வேறுபாடு என்னவென்றால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெவ்வேறு செயல்பாடுகளையும் பணியையும் கொண்டிருக்கிறான் என்பதாகும். நாம் அனைவரும் ஒரே வேலையைச் செய்வதில்லை, ஆனால் தேவன் நாம் செய்யும்படி நம்மெல்லாருக்கும் கொடுத்திருக்கிற எல்லா வேலைகளையும் செய்வதற்கு நாம் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்க வேண்டியது அவசியம்.

பவுல் எபேசிர்4:11-16ல் நாம் ஏன் வெவ்வேறான பங்கினையும் பணிகளையும் பெற்றுள்ளோம் என நமக்கு போதிக்கிறார்.

**அவர்:**

**மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும்**

**வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தியை உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.**

சபையானது ஒரு சரீரமாயிருக்கிறது, ஆனால் பல அங்கத்தினர்களையும், இந்த அங்கத்தினர்கள் ஒருவர் இன்னொருவருடைய வளர்ச்சிக்காகவும் கிறிஸ்துவில் பூரண வளர்ச்சியடைவதற்காகவும், இணைந்து வேலைசெய்கிறவர்களாயிருக்கிறார்கள். இது, முறைப்படி, கிறிஸ்துவின் சரீர வளர்ச்சிக்கும் அத்தோடுகூட உலகம் முழுவதும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு (மாற்.16:15,16) அனைவரும் வாஞ்சிப்பதற்கும் இது காரணமாகிறது. நாம் பொறுமையுடனும், கற்றுக்கொள்ளவும், வளரவும், ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்க விரும்புவோமென்றால் சபையின் எந்த வேலையையும் செய்ய நம்மை ஒப்புகொடுத்தவர்களாய் இருக்க முடியும்.

**ஆசிரியர் கடிதம்**

‘ தி வேர்ட் ஆப் கிறைஸ்ட் ’ மாத இதழின் வாசகர்களுக்கும்,
வேத அறிவுப்போட்டியாளர்களுக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது உங்களுடைய Ref No: யை எழுதவும்.
அத்துடன் உங்களுடைய முகவரி மற்றும் மொபைல் எண் அவசியம்.
எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய மொபைல் எண் 9443558041
உங்களுடைய நண்பர்களின் முகவரிகளை SMS மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தினால்
நாங்கள் மாத இதழ் அனுப்பி வைப்போம்.
வேத அறிவுப்போட்டில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் Vol.4 புத்தகம்
அனுப்பப்பட்டுள்ளது பெற்றுக்கொள்ளுங்கள்.

## தெரிந்துகொள்வோம்

-K.R.K.Ravi Asir

- 1.20 கோடிக்கும் அதிகமானோர் இந்தியாவில் பார்வை இழந்தவர்களாக இருக்கிறார்கள்.
- பாரசீகத்தில்தான் குங்குமப்பூ தோன்றியது.
- இந்தியாவின் ஆட்சிக்குள் 1197 தீவுகள் உள்ளன.
- கெயில் போர்டனின் கண்டுபிடிப்பு – பதப்படுத்தப்பட்ட பால்
- ஆண்டுதோறும் பட்டத்திருவிழா நடக்கும் இடம் அகமதாபாத்.



பெண்கள் பகுதி

# வஞ்சிக்கப்படாதிருங்கள்
## Be Not Deceived

-Glory Arjunan



இன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்குச் செவிசாய்ப்போமா?

**சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்:** சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனா யிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13-ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது. அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளச்செய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

**நம்மை நாமே வஞ்சித்தல்:** சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம்.

## ஒரு முடிவு முடிவே அல்ல! -K.S.Manikavasagam

**"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை!" புலம்பல்3:22**

தேவனுக்கும் மனிதருக்கும் உள்ள ஐக்கியத்தை கெடுத்து ஒருவனுக்குள் இருக்கிற நம்பிக்கை, விசுவாசம், அன்பு மனிதநேயம் இவைகளை அழித்து சீர்குலைத்து காலமுழுவதும் பாவவழியிலேயே பாவத்துக்கு அடிமையாயிருக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தால் சர்ப்பமானது (சாத்தான்) தன்னுடைய தந்திரத்தினாலே ஆதாம் ஏவாளை வஞ்சித்தது. இது சர்ப்பத்தின் முடிவாக இருந்தது. ஆனால் தேவனின் தீர்ப்பும் வாக்குறுதியும் முடிவும் வேறுவிதாக அமைந்தது (ஆதி.3:15).

நீங்கள் "அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே" (1பேது.1:23).

யோசேப்பு: யாக்கோபுக்கு ராகேல் பெற்ற இரண்டு குமாரரில் இவன் மூத்தவன். இவனுடைய நற்குணத்தினிமித்தம் தகப்பன் இவனை அதிகம் நேசித்து பிரியமாயிருந்தான். இதனால் இவனுடைய சகோதரர்கள் இவனை பகைத்தார்கள். இவன் கண்ட சொப்பணங்களினிமித்தம் அவர்கள் இவன்மேல் பொறாமை கொண்டார்கள். ஒரு முறை இவன் தன் சகோதரர்களை பார்க்க தோத்தான் நாட்டுக்குப் போனபோது இவனை கொலை செய்ய சகோதரர்கள் சதியோசனைபண்ணி, பின்பு இஸ்மவேல் வியாபாரிக்கு விற்றார்கள். இஸ்மவேலர் பார்வோனின் பிரதானியும் அதிபதியுமாகிய போத்திபார் என்பவனுக்கு விற்றார்கள். ஆண்டவர் இந்த யோசேப்புடன் இருந்தார். அவன் செய்கிற சகல காரியத்தையும் வாய்க்கப்பண்ணுகிறார் என்று போத்திபார் கண்டு யோசேப்பை சிறப்பு பணியாளராகவும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். யோசேப்பு தன் எஜமானுக்கு நம்பிக்கையும் விசுவாசமாகவும் உண்மையாகவும் தேவனுக்கு பயந்தவனாகவும் இருந்தான். எஜமானனின் மனைவி தன்காம இச்சைக்கு யோசேப்பை உடன்படும்படி அழைத்தபோது கர்த்தருக்குப் பயந்து எஜமானுக்கு துரோகம் செய்யக்கூடாது என எண்ணி அவளை தள்ளிவிட்டு வெளியே சென்றான். அவளோ தன்தீய எண்ணம் வெளிப்பட்டுவிடுமோ என அஞ்சி யோசேப்பு என்னோடு சரசம் பண்ணும்படி வந்தான் என பொய்குற்றம் கூறி வீண்பழியை சுமத்தினாள். யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டான். இதுதான் முடிவு என யோசேப்பின் சகோதரர்கள் செய்த முடிவும், வீண்பழியும் குற்றமும் சுமத்திய போத்திபாரின் மனைவியின் முடிவும் முடிவு அல்ல தேவனின் முடிவு வேறுவிதமாக ஆச்சரியமாக இருந்தது (ஆதி.39-41 அதிகாரங்கள் படிக்கவும்).

மொர்தெகாய்: சூசான் அரண்மனையில் மொர்தெகாய் என்னும் பெயர் கொண்ட யூதன் ஒருவன் இருந்தான். அகாஸ்வேரு ராஜா ஆமான் என்பவனை மேன்மைப்படுத்தி தன்னிடமுள்ள சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்தினான். ராஜாவின் கட்டளைப்படி அரண்மனையில் பணிபுரிந்தவர்கள் யாவரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். ஆனால் மொர்தெகாய் ஆமானை வணங்கவுமில்லை நமஸ்கரிக்கவும் இல்லை. தேவனைத் தவிர எந்த ஒரு மனிதனையும் வணங்கக்கூடாது எனவே அனைத்தையும் ஆளும் மாமன்னராகிய தேவனுக்கே துதியும் கனமும் உரியது அதை நான் மனிதருக்குக் கொடுக்கமாட்டேன் என்று உறுதியாயிருந்தான். இதனால் ஆமானின் நெஞ்சில் வஞ்சம் நிரம்பியது. மொர்தெகாயை மட்டுமல்ல அவன் இனத்தாராகிய யூதர் அனைவரையும் அழிக்க ஆமான் வழி தேடினான். ஆதார் மாதமான பன்னிரெண்டாம் மாதம் பதின் மூன்றாந்தேதி அன்று ஒரே நாளிலே சிறுவர் முதல் பெரியோர்வரை குழந்தைகளும் பெண்களும் உள்பட யூதர் அனைவரையும் அழித்து கொன்று நிர் மூலமாக்கவும் அவர்கள் உடமைகளை கொள்ளையிட வேண்டுமெனவும் விரைவு அஞ்சலர் வழியே அரசின் அனைத்து நாடுகளுக்கும் அனுப்பப்பட்டது. மேலும் மொர்தெகாயை தூக்கிலிட ஆமான் ஐம்பது முழு உயரமுள்ள தூக்குமரத்தையும் செய்து இதுவே மொர்தெகாயின் முடிவு என ஆமான் நினைத்தான். ஆனால் மொர்தேகாயின் வளர்ப்பு மகள் யூத பெண் எஸ்தர். இவள் ராஜாவின் மனைவி இவள் இச்செய்தியை அறிந்து தன் தோழிமார்களோடு சேர்ந்து தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணி பின்பு அதை ராஜாவுக்கு அறிவித்து 127 நாடுகளில் வாழ்ந்த யூதஜனங்களை காப்பாற்றினாள். ஆமானுக்கு தான் மொர்தெகாய்வுக்கு செய்த தூக்குமரம் கிடைத்தது. தேவனின் முடிவு தம் ஜனத்திற்கு இரட்சிப்பானது.

-தொடரும்



# எவ்வாறு ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்வது

## How to Attend Sunday Worship

இந்த விஷயத்தில் நீங்கள் ஏற்கனவே வல்லுநனராக இருப்பீர்கள், ஆனால் இவ்விஷயத்தில் அதிகப்படியான சில குறிப்புகள் உங்களுக்குத் தேவை, தயவுசெய்து சரியான முறையில் ஆராதிக்க நமக்கு உதவுகின்ற பின்வரும் தகவல்களை காண்போம்:

**1. சனிக்கிழமை மாலை சீக்கிரமாக படுக்கைக்குச் சென்று ஞாயிற்றுக் கிழமையில் சீக்கிரமாய் படுக்கையை விட்டு எழும்புங்கள்.** நான்றாக ஒய்வெடுத்துக்கொள்ளுங்கள். ஆராதனைக்கு தூங்கி வழிந்துகொண்டு செல்லாதீர்கள்.

**2. சபை கூடுகைக்குச் சீக்கிரமாக வாருங்கள்.** கடைசி நிமிடம் வரை காத்துக்கொண்டு இராதீர்கள். உங்களுடைய வருகை ஒழுங்குபடுத்துவதற்கும், வழி காட்டுவதற்கும், ஏற்பாடுகள் செய்வதற்கும் இன்னும் இதுபோன்ற காரியங்களுக்கும் தேவையாயிருக்கிறது. நீங்கள் வழியில் செல்லுகின்ற புதியவரை நிறுத்தி அழைத்து வருகிறவராக இருக்கலாம்.

**3. நீங்கள் உங்களுடைய வேதாகமம், பேனா, பேப்பர் மற்றும் குறிப்பேடுகளையும் கொண்டுவாருங்கள்.** செய்தி நேரத்தில் அல்லது வேதபாடநேரத்தில் குறிப்புகள் எடுத்து அவைகளை எதிர்கால நலனுக்காக நேர்த்தியாக வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள்.

**4. ஊழியத்தில் பங்குகொள்ளுங்கள்.** பாடுங்கள், ஜெபியுங்கள், ஏற்றவேளையில் வினா எழுப்புங்கள் மேலும் ஏகசிந்தையுடன் ஒத்துக்கொள்ளும்போது இருதயத்தின் ஆழத்திலிருந்து "ஆமென்" என்று சொல்லுங்கள்.

**5. விருந்தினர்களை சந்தியுங்கள்.** உங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் உங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை ஏற்படுத்துங்கள். அவர்கள் வேதத்தை அறியாதவர்களாயிருந்தால் உங்களுடைய வேத அறிவினை அவர்களோடு பகிர்ந்து கொண்டு வேதவசனங்களை அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்யுங்கள்.

**6. உற்சாகமூட்டி ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்:** குறிப்பாக பிரசங்கித்தவரை, பாடல் நடத்துனரை, ஜெபத்தினை நடத்தினவர்களை, உடன் கிறிஸ்தவர்களை, புதிய விருந்தினர்களை மேலும் மற்றவர்களையும் இவ்வாறு செய்யுங்கள்.

**7. ஆராதனைக்குப் பிறகு சகோதரர்களை, விசேஷமான விருந்தினர்களை சந்திக்கக் கூடுதல் நேரத்தைச் செலவிடுங்கள்.** வேகமாக வெளியேறிவிடாதீர்கள். மேலும் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் மட்டுமே பேசாதீர்கள். விருந்தினர்கள் அல்லது புதிதாக வருகைதந்தவர்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள்.

*-TVOTI*

பெண்கள் பகுதி




-Betty

# இயேசு கிறிஸ்து, நித்தியபலி

# Jesus Christ, The Eternal Sacrifice

## தலை மற்றும் அவருடைய சரீரம்

## The Head and Body

"எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்க ளெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே யிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1கொரி.12:12,27).

இந்த வசனம் ".... அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது" என்று மாத்திரம் கூறவில்லை, அது ஒன்றாகவே; இணைந்திருக்கிறது என்கிறது. ஆனால் இந்த வசனம், "... அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவுமிருக்கிறார்..." என்றும், தம்மை தலையாகவும் அவருடைய சரீரமாகிய சபையாகவும் அடையாளப்படுத்துகின்றார். இப்படியாக முழுவதும் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற முழுவதும் ஒன்றுபட்ட ஒன்றாகயிருக்கிறது.

நம்முடைய மனங்கள் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின மாதிரியையும் மற்றும் மனுஷனை பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு தாமே சுமந்துதீர்த்த தம்முடைய இயற்கை நீதியையும் தெய்வீகத் தன்மையையும் பின்பற்றுகிறதா? தம்முடைய சொந்த நித்திய மகிமையைத் துறப்பதற்கும் மாம்சத்தில் பிறப்பதற்கும் இது அவருக்குப்போதுமானதாக யிருக்கவில்லை; நம்முடைய பாவங்களை தாமாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சிலுவையின் மூலம் மரணத்தின் அவமானத்தை சுமப்பதற்கு இது அவருக்குப் போதுமானதாகயிருக்கவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேகமாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபடியினால், அவர் மேலும் மனிதர்களாலான சரீரத்திற்கு மேலான தலையாக இருக்கும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அடிக்கடி, மாம்ச சரீரத்தை அடிமைப்படுத்தக் கூடிய இன்னிசையைப் பார்க்கையில், நாம் சங்கிலியால் கட்டப்பட்ட பலமுள்ள சரீரத்தைக் கொண்டிருக்கும் பயத்தில் உள்ளுக்குள் நெளிகிறோம் அல்லது மனமுடைந்து அல்லது ஆரோக்கியமும், புத்தியுமுள்ள மனம் செயலிழந்துபோன சரீரத்தில் சிறைபட்டு போகிறோம். வயது முதிர்ந்த சிறையிருப்பு ஏறக்குறைய பீதியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட சிறையிருப்புகளுடன் வாழ்வது ஒவ்வொரு வருடமும் எப்பேர்பட்ட ஏமாற்றமும் மனமுடையதாய் இருக்கும்.



### சரீரத்தினால் சுமந்த பாடுகள்

நாம் சிலநேரங்களில் அவருடைய செயலாக, சில சமயங்களில் ஆர்வமிக்கவர்களாக, சில சமயங்களில் சோம்பலாக, சில சமங்களில் எதிர்க்கிறவர்களாக, சில சமயங்களில் செயலிழந்தவர்களாக, சில சமயங்களில் இவ்வுலகில் செத்த சரீரமாக இருக்கிறபடியால் மெய்யான வழியில், நம்முடைய உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்முடைய தலையாக இருப்பதில் எல்லைக்குட்பட்ட தடைகளை அனுபவிக்கிறார்.

சரீரத்தோடுள்ள உறவில் தலையின் பங்கு என்ன? இது தன்னிச்சையான, தன்னிச்சையற்ற செயல்பாடுகளின், எண்ணங்களின் பிறப்பிடத்தின் முனையாக இருக்கிறது. தலை பார்க்கிறது, ஆசைப்படுகிறது, விரும்புகிறது; ஆனால் இது ஒன்றோடொன்று இணைந்து வேலைசெய்யும் சரீரத்தின் அங்கங்களை, பார்வையை நேர்படுத்தும்படிக்கு சார்ந்திருக்கவேண்டும்.

கிறிஸ்து அற்புதத்தினால் இருதயங்களை மாற்றும்படிக்கு பூமிக்கு இறங்கி வந்திருக்கிறாரா? தேவதூதர்கள் உலகத்தை சுற்றிவந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்களா?

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறக்கும் நோக்கிற்காகவே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். கிறிஸ்து அந்த இலக்கை அடையும்படிக்கு மரித்தார்.

ஆனால் தேவன் பரலோகத்திலிருந்து ஜனங்களிடம் நேரடியாக பேசுகிறாரா? கிறிஸ்து இருதயங்களை மாற்றும்படிக்கு அற்புதங்களோடு இறங்கிவந்தாரா? தேவ தூதர்கள் உலகத்தைச் சுற்றிவந்து சுவிசேஷத்தைப் போதிக்கின்றார்களா? இல்லை.

பிறகு இவைகளெல்லாம் யாருடைய கரங்களில் உள்ளன? அவருடைய சரீரத்தின் கரங்களில். தலை உலகத்தைப் பார்க்கிறது; அவர் இழந்துபோனவர் களுக்காக ஏங்குகிறார்; எல்லாரும் சுவிசேஷத்தின் அன்பையும், இரக்கத்தையும் உணரவேண்டுமென அவர் விரும்புகிறார். மூளையிலிருந்து கண்களுக்கும், நாவிற்கும், கைகளுக்கும், கால்களுக்கும் இருதயத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே ஒருமித்த பிரதியுத்திரங்கள் காணப்படும்போது, அநாதி தீர்மானங் கள் நிறைவேறுகிறது என்று அவர் அறியவேண்டும் என்பது எப்பேர்பட்ட மகிழ்ச்சி!

ஆனால், தலையிலிருந்து செய்தி அனுப்பப்பட்டு, போதனைகளுக்கு செவிசாய்க்க தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் மறுக்கும்போது அவர் ஏமாற்றத் தையும் மன வேதனையையும் அனுபவிக்கவேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். எத்தனை முறை அவர் நம்முடைய சோம்பல் அல்லது செயலற்ற நிலையினால் சிறைப்படுத்தப்படுகிறார் என்பதை சிந்தியுங்கள். அவருடைய சரீரத்தில் அங்கங்கள் அவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணும்போது எவ்வளவு மனவேதனை அடையவேண்டியுள்ளது என்பதையும், நம்முடைய வெட்கக்கேடான செயல்களால் எவ்வளவு அதிகமாக அவருடைய மகிமை அவதூறு செய்யப்படுகிறது என்பதையும் சிந்தியுங்கள். தேவனுடைய சாராம்சம், பொய், வஞ்சனை, ஒழுக்கம் கெட்ட வாழ்வு, தீமையான நினைவுகளில் சந்தோஷப்படுதல், கெட்டவார்த்தைகளை பயன்படுத்துதல், வீட்டைக் களைத்தல், திக்கற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அவர் விருப்பம் கொள்வாரா? அவருடைய சரீரமாக நாம் எதைச்செய்தாலும், அவருக்கென்றே நேரடியாகச் செய்வோமாக.